உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எச்சாட்டி.
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
உறவினர்கள்

(7961)

# சுத்திகரிப்பு இன்மையால் வைத்தியசாலை பாதிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நிலவும் சுகாதார சுத்திகரிப்புத் தொழிலாளர் பற்றாக்குறையினால் இவ் வைத்தியசாலையின் சுகாதார சுத்திகரிப்பு நடவடிக்கைகள் ஸ்தம்பித்து வருவதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வைத்தியசாலையில் 20 சுகாதார சுத்திகரிப்புத் தொழிலாளிகள் கடமை புரியவேண்டியிருந்தும் தற்போது 12 சுகாதார சுத்திகரிப்புத் தொழிலாளர்களே கடமைபுரிகின்றார்கள். எனவே இவ் வைத்தியசாலையில் நிலவும் சுகாதார சுத்திகரிப்புத் தொழிலாளர் பற்றாக்குறையைப் போக்கி இவ் வைத்தியசாலையின் சுகாதார சுத்திகரிப்பு நடவடிக்கைகளை ஒழுங்காக மேற்கொள்ள வகைசெய்யுமாறு இப்பகுதி மக்கள் சுகாதாரத் திணைக்களத்தைக் கேட்டுள்ளனர். (25)

காரி திரு. சு. கனகராசா ஆகியோர் கலந்துகொள்கின்றனர் (25)

ஃ ஃ ஃ

(கொழும்புத்துறை)

தம்பசெட்டி பூலோவிமேற்கு சதாவதானி கதிரை வேற்பிள்ளை சனசமூகநிலையத்தின் சார்பில் சதாவதானி நா, கதிரைவேற்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்த குருபூசைத்தினப் போட்டிகள் இன்றும் நாளையும் காலை 9-00 மணி தொடக்கம் நினையமண்டபத்தில் நிலையத் தலைவர் திரு. அ. துரைசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் 2விதமான போட்டிகள் நடைபெறும் என நிலையச் செயலாளர் திரு. க இராமச்சந்திரன் அறிவித்துள்ளார். (24)

## கடன்வழங்க நடவடிக்கை

யாழ் மாவட்ட மக்களின் நன்மை கருதி ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை விவசாய ஊக்குவிப்புக் கடன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றது இக் கடன்கள் முதன் முறையாக இம் மாவட்ட மக்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் இவ் வங்கியினால் வழங்கப்பட இருக்கின்றது

## கருத்தரங்கிற்கு ஏற்பாடு

யாழ் மாநகரசபை சுகாதாரவைத்தியப்பகுதி பணிமனையின் ஏற்பாட்டில் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு ஒன்றினை நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளது

ஆயுதப்போராட்ட சூழ்நிலையில் சிறுவர்களுக்கு உதவுவது என்னும் பொருள்பற்றிய கைந்நூலை அடிப்படையாகக் கொண்டு பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான மேற்படி பயிற்சிக் கருத்தரங்கை எதிர்வரும் விடுமுறை நாட்களில் நடாத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநகர சபையின் சுகாதார வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (41)

### சிந்தனைக்கு

வாரத்தில் ஆறு தினங்கள் நான் நடந்துகொள்ளும் முறையை பொறுத்துத்தான், ஏழாம் நாள் நான் செய்யும் உபதேசத்திற்கு மக்கள் பொருள் காண்பார்கள்.

- ரிச்சர்ட் ஸிஸில்.

# ஈழநாதம்

51, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 09-04-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2022
தபால் பெட்டி எண் 05

## ஒப்பீட்டிற்கு ஒவ்வாத உதாரணம்

இனவெறி கொண்ட கனடாப் பிரஜை ஒருவர் இலங்கையில் இருந்து சென்று கனடாவில் குடியேறிய ஒருவரைத் தாக்கி காயப்படுத்தியமைக்காக அந்நாட்டு நீதிமன்றம் அவருக்கு நான்கு ஆண்டுகால கடுழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

குற்றவாளியாகக் காணப்பட்ட இளைஞர் தன் தவற்றை உணர்ந்து கொண்டதாகவும், தன்னை மன்னிக்குமாறு நீதிபதியிடமும், தாக்குதலுக்குள்ளான குடும்பத்தினரிடமும் கண்ணீர் மல்க மன்னிப்புக் கோரிய போதும் நீதிபதி அதனை ஏற்றுக் கொள்ளவில்லை, தனது தீர்ப்பில் இவ்வளவு குறுகிய காலத்திற்குள் இக் குற்றவாளி திருந்தியிருப்பார் என நான் நம்பவில்லை எனத் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

நீதிபதியின் இத்தீர்ப்பானது கனடாவில் இனவாதம் தலை எடுக்கக்கூடாது என்பதிலும் அது வன்முறையாக மாறினால் அது மன்னிக்கப்படக் கூடாது என்பதிலும் எவ்வளவு கரிசனை காட்டப்படுகின்றது என்பதையே காட்டுகின்றது. இந் நிலையிலேயே கனடாவில் கியூபெக் மாநிலம் தனி அரசாகப் பிரிந்து போக விரும்பிய போதும் அங்கு வன்முறை தலையெடுக்காததிற்குக் காரணமாகும். அதாவது சட்டத்தின் முன் சகலரும் சமம் என்பதும் அதை நிறைவேற்றுவதில் நீதித்துறை பாரபட்சம் இன்றி செயற்படுவதையுமே அது காட்டுகின்றது.

இவ்வாறானதொரு சூழ்நிலை நிலவும் கனடாவில் உள்ள கியூபெக் மாகாணப் பிரச்சினையைத் தான் அண்மையில் இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினையுடன் சிறிலங்கா ஜனாதிபதி ஒப்பிட்டுப் பேசியுள்ளார். இனப் பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணும் பொருட்டு சமரச முயற்சியில் ஈடுபட விரும்பிய கனடா நாட்டு பாராளுமன்ற உறுப்பினர் சிலருக்கும், அமைப்புக்களுக்கும், முதலில் கியூபெக் பிரச்சினையைத் தீருங்கள்; மற்றவற்றைப் பிறகு பார்க்கலாம் எனத் தெரிவித்திருந்தார்.

இது சிறிலங்கா ஜனாதிபதியின் விதண்டாவாதப் பேச்சும், யதார்த்தத்தை நிராகரிப்பதான அறிவிப்பும் ஆகும்; சிறிலங்காவின் அரசியல் வரலாற்றில் எப்பொ

## 4 பொலிசார் உயிரிழப்பு

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டம் புல்மோட்டைப் பகுதியில் கடந்த வாரம் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த பொலிசாரின் எண்ணிக்கை நான்காக உயர்ந்துள்ளது என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை செயலகம் கூறியுள்ளது. மேலும் இருவர் காயமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

### தேசிய

துறை என்றுமில்லாதவாறு பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறது

எதிரியின் பாரிய அழிப்பு வேலைகளுக்கு மத்தியில், எமது விடுதலை இயக்கமானது, தனது சக்திக்கு உட்பட்டதாக, சில ஆக்க வேலைகளைச் செய்து வருகிறது. பெரியதொரு போருக்கு முகங்கொடுத்தவாறு, சமூக மேம்பாட்டிற்காக உழைப்பதில் பல இடர்பாடுகள் இருக்கவே செய்யும். விடுதலை வேண்டிப் போராடும் இனங்கள் இந்தப் பிரச்சினையை எதிர்கொள்வது இயல்பு.

எமது தேசம் விடுதலை பெற்று, நிலையான அமைதியும், உறுதியான அரசும், தோன்றும் பொழுதுதான், நாம் எமது சமூகப் பொருளியல் வாழ்வை உயர்ந்த படி நிலைக்குக் கட்டி எழுப்புவது சாத்தியமாகும். அப்பொழுது தான், கல்வித்துறையையும் சீரான முறையில் சீரமைத்து எமது நாட்டின் நலன்பேணும் வகையில் மேம்பாடு செய்ய முடியும். தேசிய கல்வித் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த முடியும். அறிவியல்-தொழில்நுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து, எமது நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல முடியும்.

எமது சமூகத்தின் ஒட்டுமொத்தமான விடிவிற்கும், விமோசனத்திற்கும், தேசிய விடுதலை அதியாவசியமானது என்பதை நான் வலியுறுத்தத் தேவையில்லை. கல்வி உட்பட சகல சமூக அமைப்புகளையும், ஒரு உன்னதமான வளர்ச்சிப் போக்கில் உயர் நிலைக்கு நகர்த்திச் செல்வதாயின், நாம் சுதந்திர மனிதர்களாக, எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் உரிமை பெற்றவர்களாக, இறைமை பெற்றவர்களாக இருக்க வேண்டும். இதனால் தான் தேசிய விடுதலையை எமதுபிரதான இலட்சியமாக

## சமாதானத்திற்கு

தற்கு சிங்கள அரசு தயாராக இல்லை.

கடைசியாக சபாநாயகர் முகமது வருவது என அறிவித்திருந்தார். ஜனாதிபதியுடன் கதைத்து அரசாங்கத்தின் பிரதிநிதியாக, பாராளுமன்ற சபையின் பிரதிநிதியாக ஒரு சோனகத் தலைவராக இங்கு வரப்போகிறேன் என எழுதியிருந்தார்.

சரி! வருக. எல்லாப் பிரச்சினைகளும் கதைக்கலாம் முஸ்லிம் மக்களின் பிரச்சினையும் கதைக்கலாம்.

மனித உரிமை சபையின் தலைவரையும் அழைத்துக் கொண்டு வரப்போகின்றேன் என்று கேட்டார்.

சரி அவரையும் கூட்டிக் கொண்டு வாருங்கள். இத் திகையாம் திகதி வருவதாகத் தந்தி அடித்தார்.

வாருங்கள் எல்லா ஒழுங்குகளையும் செய்கிறோம் என்று சொன்னோம்.

ஹெலிக்கொப்டரில் வந்து யாழ்ப்பாணத்திற்குள் இறங்கப் போகின்றோம் என்றார். வந்து இறங்குங்கள் யார் வேண்டாம்என்று சொன்னது? இடத்தையும் பார்த்துக் கொடுத்தோம் பல்கலைக் கழக முன்றலில் வந்து இறங்கலாம் என்றோம்.

இவ்வளவுசொல்ல, ஜனாதிபதி கடைசி நேரத்தில் அவரைக் கூப்பிட்டுச் சென்னாராம், அங்கு போகவேண்டாம் என்று அவர் மனம் உடைந்து எமக்கு எழுதுகிறார்.

ஜனாதிபதி என்னை ஏமாற்றிப் போட்டார். யார் யாரை ஏமாற்றியது? நீரும் அதே கட்சியில் இருக்கிறீர் நீரும் அந்தக் கட்சியின் தலைவர். நீர் சபாநாயகர். ஒரு முக்கிய பொறுப்பை உடையவர்.

முதலில் 'ஆம்' என்று பின்னர் 'வேண்டாம்' என்கிறார். இது எதைக் காட்டுகிறது?

யார் சமாதானத்தை உண்மையில் விரும்புகின்றனர்? யார் சமாதானத்தை விரும்பவில்லை?

### வெளிநாடுகள் மத்தியஸ்தத்திற்கு தயார்

எத்தனையோ வெளிநாட்டு அரசியல்வாதிகள் வந்து எமது பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தம் வகிப்பதற்கு தயாராக இருப்பதாக கடிதங்கள் எழுதுகிறார்கள்.

கனடா, சுவிற்சர்லாந், அவுஸ்திரேலியா போன்ற எத்தனையோ நாடுகள் அரசாங்கத்திற்கு கடிதம் எழுதியிருக்கின்றன. எங்களுக்கும் எழுதியிருக்கின்றன. வெளிநாடுகளின் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று சொல்லி

தர்மத்தின் அடிப்படையில் சில நடவடிக்கைகளை எடுக்கின்றோம்

எங்களை வந்து உலகம் குற்றம் சொல்ல முடியாது அதாவது பேச்சுவார்த்தைக்கு தயார், சமாதானத்திற்கு தயார் என்னும் விடுதலைப் புலிகளின் கூற்றை இன்று உலகம் நிராகரித்துவிட முடியாது.

கொழும்பிலிருந்து சொல்கிறார்கள், இந்தச் சமாதானம் பற்றி பாலசிங்கமும், கரிகாலனும் தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள்: தலைவர் பிரபாகரன் ஒரு அறிக்கையும் விடவில்லை என்று:

### எத்தனைதரம் அறிக்கை விடுவது

பிரபாகரன் எத்தனை அறிக்கையை விட்டார்... உங்களுக்கு ஒவ்வொரு கிழமையும் ஒவ்வொரு அறிக்கையையா விடவேண்டும்?

அன்னையின் அனைத்துலக மகளிர் தினத்தன்று தலைவர் அறிக்கை விடுகின்றார். பகிரங்கமாக - ஒரு உத்தியோகபூர்வமாக தலைவரின் இந்த அறிக்கை இருக்கிறது

சமாதானக் கதவுகளைத் திறந்து வைத்திருக்கின்றோம்; பேச்சுவார்த்தைக்கு தயார்...எத்தனை தடவை செல்கிறது?

யார் சமாதானத்தை விரும்பவில்லை? தமிழ் மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள்: விடுதலைப் புலிகள் சமாதானத்தை விரும்புகிறார்கள். சிங்களவரும் சமாதானத்தை விரும்புகிறார்கள் உலகமும் சமாதானத்தை விரும்புகிறது ஆனால் சிங்கள ஆட்சி பீடம் சமாதானத்தை விரும்பவில்லை.

ஏன் விரும்பவில்லை? ஏன் பேசுவதற்கு இவர்கள் கஷ்டப்படுகிறார்கள்? இவர்கள் பேசுவதற்கு கஷ்டப்படுவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

### தோல்வியுடன் அரசு பேச விரும்பவில்லை

மாறி மாறி மண்கிண்டி மலையிலும், கொக்கிளாயிலும், பூநகரிலும் அடிவாங்கியாகி விட்டது, இராணுவத்திற்கு பெரிய பேரிழப்புகள், பெரிய தோல்விகள்... தென்மாகாணத் தேர்தலிலும் தோல்வியடைந்தாகிவிட்டது.

இப்படிய விழுந்து கிடக்கின்ற நேரத்தில் புலிகளுடன் பேசக் கதைக்கக் கூடாது. இது ஒரு நியாயப்பாடு சொல்கிறார்கள்;

இப்போது போனால் எங்களுக்குச் சரியில்லை புலிகளின் நிலை பலமாக இருக்கிறது அவன் யுத்தத்திலும் பலமாக

ப்படைக் கோரிக்கையான தாயகக் கோரிக்கையை முன்வைத்தால், இவர்களால் என்ன சொல்வது என்று தெரியாது.

பேச்சுவார்த்தை என்றால் சும்மா பேச்சுவார்த்தையா? நாற்பது ஆண்டுகளாகப் போராடியிருக்கிறோம் அல்லவா ? 40 ஆயிரம் மக்களைப் பலி கொடுத்து ஆறாயிரம் போராளிகளை பலி கொடுத்து, இத்தனை அழிவுகள், சிதைவுகள் மரணங்களுக்குப் பிறகு, எமது அடிப்படைகளை விட்டுக் கொடுக்க முடியுமா? அது முட்டாள்தனம் அல்லவா?

### சிங்கள அரசு குழம்பிப் போயுள்ளது

இப்போது ஒரு நெருக்கடியான கட்டத்தில் சிங்கள அரசு இருக்கிறது. குழம்பிப் போய் இருக்கிறது உலகம் ஒரு பக்கத்தால் அவர்களை வற்புறுத்துகிறது. புலிகளுடன் போய்ப் பேச, இல்லாவிடில் காசு தரமாட்டோம்.

ஒரு சிங்களப் பத்திரிகையாளர் வந்து சமாதானம் பற்றி என்னுடன் கதைத்தார் நான் சொன்னேன் நாங்கள் தான் சமாதானம்... சமாதானம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்: உங்கள் கிழட்டு ஜனாதிபதி விடும் அறிக்கைகளை பார்த்தீர்களா இப்படியொரு மனிஷன் அறிக்கை விடுவானா? என்று கேட்டோம். அதற்கு அந்த பத்திரிகையாளர் சொன்னார் 'அவரைப்பற்றி பெரிதாக எடுக்காதீர்கள் அவர் ஒரு கோமாளி...' என்று

அப்போது நான் சொன்னேன் இவரின் கோமாளித்தனத்தில் சனங்கள் அல்லவா சாகின்றார்கள். இந்தக் கோமாளியை ஜனாதிபதியாக வைத்திருக்கிறவர்களும் கோமாளி அல்லவா ?

எங்களைப் பொறுத்தவரை அவர் சிங்கள தேசத்தின் ஜனாதிபதி, முப்படைத் தளபதி, அவர்தான் எல்லாம், அவரின் விசர்க் கதைகளுக்கு நாங்கள் பேசாமல் இருக்க முடியாது என்றோம்.

ஐக்கிய தேசியக் கட்சி ஒரு நெருக்கடியில் நிற்கிறது அடுத்த ஆறு மாதத்திற்குள் ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என்று தேர்தல்கள் வருகின்றன. இச் சமயம் ஐக்கிய தேசியக்கட்சி இல்லாமல் போனால் இவர்களுடன் பேசிப்போட்டு வேறொரு புதிய அரசாங்கம் வந்தால் நாங்கள் என்ன செய்வது?

### சரியான பாதையில் செல்கிறோம்

### மேற்குலகு நினைத்தால் திருப்பலாம்

ஆனால் மேற்குலகம் நினைத்தால் ஒரு பெரிய திருப்பத்தை உண்டாக்கலாம். அரசாங்கத்தின்மீது அழுத்தத்தைப் போடலாம் மனித நீதியின் சார்பில்... தர்மத்தின் சார்பில்... சமாதானத்தின் சார்பில் பெரிய திருப்பம் ஏற்படுத்த மேற்குலகால்தான் முடியும் அதை அவர்கள் செய்யவேண்டும். அந்தக் காலம் வந்திருக்கிறது.

### கல்வி வளர வேண்டும்

அவர் அங்கு கல்வி மேம்பாட்டைப்பற்றி பேசும்போது

எமது இயக்கத்தின் கல்வி குறித்த நோக்கம் என்ன? இலக்குகள் என்ன என்பது பற்றி காலத்திற்கு காலம் எமது தலைவர் அவர்கள் தெளிவான துல்லியமானவரையில் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றார். இதை நீங்கள் படித்திருப்பீர்கள்.

எமது இயக்கத்தைப் பொறுத்தவரை கல்விக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். கல்வி வளர வேண்டும், கல்வித்துறை மேம்பாடடைய வேண்டும் என்பது எமது அடிப்படையான இலட்சியம்.

ஏன் கல்வித்துறையில் விடுதலைப் புலிகள் இயக்கம் இப்படியான கொள்கையைக் கடைப்பிடிக்கிறது என்று நீங்கள் கேட்கலாம்.

எமது வரலாற்றுப்பின்னணி எமது சமூக அமைப்பு... எமது பொருளியல்வாழ்வு. அனைத்தையும் நோக்குமிடத்து எமது சமூகம் காலம் காலமாக கல்விக்கு முதன்மை கொடுத்து வந்துள்ளது.

இந்தப் போராட்ட காலத்தில் எதிரி எமது கல்வியை அழித்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் இந்த சூழ்நிலையில் எமது கல்வித்துறை சிதைந்து சீரழியா வண்ணம் கல்வியை வளர்த்தெடுக்க வேண்டுமென்பதில் எமது மக்கள் மட்டுமன்றி எமது இயக்கமும் தெளிவான உறுதியோடு செயற்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள்.

### தேசிய போராட்டம் இலகுவானதல்ல

நாங்கள் ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்ற ரீதியில் போராட்டத்தை நடத்த வேண்டும். போராட்டத்தை நடத்துவது என்றால் இலகுவான காரியமல்ல உங்களுக்குத் தெரியும்.

நாங்கள் வளர்ந்து வரும் பெரிய போராட்ட இயக்கம். ஒருபுறம் எமது மண்ணை மீட்டு, அந்த மீட்கப்பட்ட பகுதியில் எமது நிர்வாக

முதலில் இயூபெக் பிரச்சினையைத் தீருங்கள்; மற்றவற்றைப் பிறகு பார்க்கலாம் எனத் தெரிவித்திருந்தார்.

இது சிறிலங்கா ஜனாதிபதியின் விதண்டாவாதப் பேச்சும், யதார்த்தத்தை நிராகரிப்பதான அறிவிப்பும் ஆகும்; சிறிலங்காவின் அரசியல் வரலாற்றில் எப்பொழுதாவது இனப்பாகுபாட்டின் அடிப்படையில் செயற்பட்டார் என பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது தண்டிக்கப்பட்டதுண்டா?

இதேசமயம் இலங்கையில் இனப்பிரச்சினை என்பதே இல்லை; பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது எனக் கூறும் சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா போன்றவர்கள் இலங்கையில் இனரீதியான வன்முறையோ அன்றி இனப்படுகொலைகளோ நடைபெறவில்லை எனக் கூறினாலும் ஆச்சரியப்படத்தேவையில்லை;

ஆனால் இலங்கையின் கடந்த கால நிகழ்வுகள் அதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டாது. காலத்திற்குக் காலம் சிங்களப் பெரும்பான்மை இனம் தமிழருக்கு எதிராக கட்டவிழ்த்துவிட்ட வன்முறையை எவரும் வரலாற்றில் இருந்து மறைத்துவிட முடியாது. இதில் தமிழருக்கு இழைக்கப்பட்ட கொடுமையானது மறந்து போகக் கூடியதும் அல்ல.

அதற்கும் மேலாக சிறிலங்கா இனவெறியர் வெலிக்கடை - மகசீன் சிறைகளில் புரிந்த படுகொலைகள் சிறிலங்காவின் வரலாற்றிலேயே கறை படிந்த கறுப்பு நாட்கள்; யாழ். நூலகத்தை சிங்களப் பொலிசார் தீயிட்டுக் கொளுத்தியமை எவரும் மறக்க முடியாத வரலாற்றுத் துயராகும்.

இதன் பின்னர் சிங்கள ஆயுதப்படையினர் வடக்கு கிழக்கில் மேற்கொண்ட இன அழிப்பு நடவடிக்கைகளும், பாலியல் வன்முறைகளும், மனித உரிமை மீறல்களும் உலகறிந்த விடயங்கள். இதில் கொக்கட்டிச்சோலை, மயிலியந்தனை, மண்டைதீவு என படுகொலைச் சம்பவங்களுக்கு நீண்ட பட்டியல் ஒன்றே உள்ளது.

ஆனால் இதில் எவற்றிற்கும் சிறிலங்கா அரசு நீதி வழங்கவில்லை. சிலவற்றிற்கு விசாரணைக் கமிசன் என அமைக்கப்பட்டதாயினும் அவற்றின் முடிவுகள் வெளிவரவில்லை; குற்றவாளிகள் எவரும் தண்டிக்கப்படவில்லை, அரசாங்கமும் நீதித்துறையும் அது பற்றிக் கவலைப்படவுமில்லை. இதற்குக் காரணம் இனவெறியை தூண்டி மக்களை இவ்வழியில் நடத்தியது அரசாங்கமே. இந் நிலையில் யார் யாரைத் தண்டிப்பது?

இவ்வாறாக அகதியாகச் சென்ற ஒருவர் இனவெறியரால் தாக்கப்பட்டதற்கு தண்டனை வழங்கத் தயாராக உள்ள கனடா அரசுடன், இனப்படுகொலைக்கே தூண்டுகோலாக இருக்கும் அரசையும் டி.பி. விஜேதுங்கா ஒப்பிட்டுப் பேசுவது வேடிக்கையானது. இதுவே அவரது இனவெறியை வெளிப்படுத்தும் அளவுகோலாகவும் உள்ளது.

---

யை நாமே நிர்ணயிக்கும் உரிமை பெற்றவர்களாக இறைமை பெற்றவர்களாக இருக்க வேண்டும். இதனால் தான் தேசிய விடுதலையை எமது பிரதான இலட்சியமாக வரித்துக்கொண்டு நாம் போராடுகிறோம்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் உயரிய நோக்குகளையும், இலக்குகளையும் மாணவ சமூகம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் புரிந்துணர்வை வளர்த்து, மாணவரிடையே தேசிய விழிப்புணர்வை ஏற்படுத்த, ஆசிரிய சமூகம் முயற்சிக்க வேண்டும். தேச விடுதலை என்பது, எல்லோரது விடுதலையையும், விடிவையும் குறித்து நிற்கும் ஒரு பொதுவான குறிக்கோள்- ஒரு தேசிய இலட்சியம். இந்த இலட்சியத்தில் எல்லோரும் பற்றுக் கொள்ளும்பொழுதுதான் தமிழரின் சுதந்திர இயக்கம் வலுமிக்க சக்தியாக உருப்பெறும்.

இன்று நாம் ஒரு போர்ச் சூழலில வாழ்கிறோம். இந்தப் போர்ச் சூழலில், எமது தேசிய வாழ்விற்கும், வளர்ச்சிக்கும், அடித்தளமான சமூக நிறுவனங்கள் சிதைந்து போகாமல் பாதுகாப்பது எமது முதன்மையான பணியாக இருக்கிறது. இதனைக் கருத்திற் கொண்டு, எமது விடுதலை இயக்கம் ஆக்கபூர்வமான செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. குறிப்பாக, கல்வித்துறையின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்குமாக நாம் உருப்படியான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் 1992 இல் தொடங்கப்பட்ட தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு இம்முறையும் சிறப்புற நடைபெற்றுள்ளதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் தேர்வுகளைப் பல்வேறு வகைகளிலும் உழைத்த அனைவரையும் பாராட்டுவதோடு, இத்தேர்வில் தேசிய, கோட்ட மட்டங்களில் உச்சபெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்குவதில் மட்டற்ற மகிழ்வு கொள்கிறேன்.

எத்தனையோ நாடுகள் அரசாங்கத்திற்கு கடிதம் எழுதியிருக்கின்றன. எங்களுக்கும் எழுதியிருக்கின்றன. வெளிநாடுகளில் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு உங்கள் மத்தியஸ்தத்தை ஏற்கத் தயார் என்று வாக்குறுதி கொடுத்தோம். ஆனால் சிறிலங்கா அரசு என்ன சொல்கிறது என்றால், வெளிநாட்டு மத்தியஸ்தம் வேண்டாம் என்று. இது ஒரு உள்நாட்டுப் பிரச்சினை.

### சமாதானத்தில் உறுதியோடு உள்ளோம்

இதற்கு மிஞ்சி நாம் என்ன செய்வது? அதாவது விடுதலைப் புலிகள் எவ்விதம் திறமையான முறையில் இந்த விடுதலைப் போராட்டத்தை- ஆயுதப் போராட்டத்தை களத்தில் முன்னெடுத்துச் செல்கிறார்களோ அதே மாதிரி, நாங்கள் சமாதான அரங்கிலும் உறுதியோடு, அறத்தின் அடிப்படையில்,

## புலிகளின் குரல் வானொலி நிகழ்ச்சி நிரல்

1994-4-9 -சனி இரவு

8. 01ற்கு - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''போர்க்களத்துப் பூவான அன்னை பூபதி''
8. 10ற்கு- அறிவியற்கலசம்
8 25ற்கு-நேயர் கடிதங்கள்
8 30ற்கு - செய்திகள்
8.40ற்கு- சித்திரம் - ''தமிழீழக் குழந்தைகள்''

1994 4-10- ஞாயிறு காலை

7 02ற்கு- மாவீர வணக்கம்
7.15ற்கு - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''பூபதியின் தியாகம் புதுமையானது''
7.25ற்கு - களத்தில் மலர்ந்தவை
7.45ற்கு- செய்திகள்
7.50ற்கு-பத்திரிகைச் செய்திகள்
7.55ற்கு - தாயகப் பாடல் என்பன இடம் பெறும்

பேச்சுக் கதைக்கக் கூடாது. இது ஒரு நியாயப்படு சொல்கிறார்கள்;

இப்போது போனால் எங்களுக்குச் சரியில்லை புலிகளின் நிலை பலமாக இருக்கிறது அவன் யுத்தத்திலும் பலமாக இருக்கின்றான். சமாதான நேக்கிலும் பலமானதாக இருக்கின்றான். நாங்கள் இப்போது போய் இந்த சமாதானப் பொறிக்குள் விழக்கூடாது என சிங்களவர் பயப்படுகிறார்கள்; அது ஒரு காரணம்.

மற்றையது இராணுவத்தினரால் நீண்டகாலமாக சொல்லப்பட்ட ஒரு விஷயம்; புலிகளை அழிக்க வேண்டும்... தமிழ்ப் பகுதிகளைக் கைப்பற்ற வேண்டும் என்று சொல்லிவிட்டு, திடீர் என புலிகளுக்கு நேசக்கரம் நீட்டினால் இராணுவம் கோபிக்குமாம். இராணுவத்தின் உறுதிப்பாடு உடைந்து போகும். ஆகவே இப்போது பேசக் கூடாது.

### தாயகக் கோரிக்கை தவிர்க்க முடியாது

இப்போது போய்ப் பேசினாலும் சில சமயம் தமிழ் மக்களின் கோரிக்கைகளைப் பற்றி பரிசீலனை செய்ய வேண்டிவரும் புலிகள் சும்மாவா பேசுவார்கள்? புலிகள் வந்து சில அடிப்படையான கோரிக்கைகளை முன்வைப்பார்கள்;

சரி! நாங்கள் வந்து தாயகத்தை அங்கீகரி என்று தான் கேட்போம் இக்கோரிக்கை புதியது அல்ல- புலிகள் இயக்கம் தோன்றுவதற்கு முன்பே அந்தக் காலத்திலேயே அன்றைய தமிழ்த் தலைவர்கள் அதைத் தான் கேட்டார்கள். பண்டாரநாயகா- செல்வநாயகம் ஒப்பந்தத்தில் வடகிழக்கு இணைந்த பிரதேசம் உள்ளது இப்போது 30 ஆண்டுகளுக்கு பிறகு வடக்கு-கிழக்கு இணைந்த பிரதேசம் தாயகம் என்று ஏற்றுக்கொள்ள முடியாது. வடக்கு - கிழக்கு இணைக்க முடியாது என்று சொல்கிறார்கள்;

அவர்கள் புலிகளுடன் வந்து பேசுவதற்கு வெட்கப்படுவதற்கும், கூச்சப்படுவதற்கும் காரணம் என்னவென்று சொன்னால், புலிகளின் அடி

களுடன் பேசிப்போட்டு வேறொரு புதிய அரசாங்கம் வந்தால் நாங்கள் என்ன செய்வது?

### சரியான பாதையில் செல்கிறோம்

இரண்டு இக்கட்டான நிலையில் அரசாங்கம் உள்ளது. ஒன்று புலிகளுடன் பேசி, ஒரு சமாதான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்; அல்லது போனால் புலிகளுடன் போராடவேண்டும்.

இனவாத அரசியல் சிங்கள தேசத்தில் வீழ்ந்து கொண்டு வருகிறது என்பது எங்களுக்குத் தெரியும்.

எம்மைப் பொறுத்தவரையில் நாங்கள் சரியான பாதையில் போய்க்கொண்டிருக்கிறோம்; சமாதானத்திற்கு சிங்கள அரசு வந்தால் நேசக்கரம் நீட்டி அவர்களை அரவணைக்க நாம் தயார். எம்முடன் சண்டைக்கு வந்தால் திருப்பி காதைப்பொத்தி அடிப்போம். இரண்டுக்கும் நாங்கள் தயார்,

எமது சமாதானக் கோரிக்கைகளை நிராகரித்தாற்போல உலகம் பேசாமல் இருக்குமென நீங்கள் நினைக்க தீர்கள். இந்த அரசு தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு மாறாக, சிங்கள மக்களின் அபிலாசைகளுக்குமாறாக, சர்வதேசஉலகத்தின் அபிலாசைகளுக்கு மாறாக, இந்த அரசு தமிழ் மக்கள் மீது ஒரு யுத்தம் தொடங்கினால், ஒரு இன அழிவைக் கொண்டுவந்தால், இது ஒரு அப்பட்டமான இனவாத அரசு என்பதை உலகம் தீர்மானிக்கும். அப்படி தீர்மானிக்கவேண்டும்

உலகம் தான் எங்களுக்கு நீதி பற்றியும், தர்மம் பற்றியும், மனித உரிமைகள் பற்றியும் சொல்லிக்கொண்டிருக்கிறது. அதாவது மேற்கத்தைய உலகம்.

ஏன்? நீ கொடுக்கிற காசில் தான் சிங்கள அரசாங்கம் ஓடுகிறது. உன் காசில்தான் சிங்கள அரசாங்கம் இயங்குகிறது

சீனாக்காரன் சும்மா ஆயுதங்களைக் கொடுக்கவில்லை. மேற்கத்தையக்காரன் பணம் கொடுக்க, அந்தப் பணத்தில் சீனாக்காரனிடமிருந்து ஆயுதங்களை வாங்குகிறது,

...குத் தெரியும்.

நாங்கள் வளர்ந்து வரும் பெரிய போராட்ட இயக்கம். ஒருபுறம் எமது மண்ணை மீட்டு, அந்த மீட்கப்பட்ட பகுதியில் எமது நிர்வாக ஆட்சியை படிப்படியாக கட்டி எழுப்பிக் கொண்டு வருகிறோம்.

### தவறுகளைத் திருத்தி வருகிறோம்

இந்த நீண்டகால பரிணாம வளர்ச்சியில் நாம் தவறுகளை விட்டிருக்கிறோம் தவறுகளை திருத்தி எமது நிர்வாகத்தை சீரமைத்து வருகிறோம்;

தனியார் கல்வி நிலையங்களை கட்டுப்படுத்துவதால் தான் கல்வி சீரழிந்து போகிறது என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது, இந்தக் கருத்தை நாம் உதாசீனம் செய்யவில்லை;

இப் பிரச்சினை தலைவர் பிரபாகரனின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது தனியார் கல்வி நிறுவனங்களின் கட்டுப்பாட்டால் கல்வி பாதிக்கப்படுகிறது என்றால், அவற்றின் கட்டுப்பாட்டை நீக்க இயக்கம் தயாராக இருக்கிறது. தலைவர் அப்படித்தான் பரிசீலனை செய்து வருகிறார்.

எம்மைப் பொறுத்தவரை கல்வி வளரவேண்டும்; ஏனெனில், இங்கு தேசிய நிர்மாணம் கட்டப்பட்டு வருகிறது தேசிய விடுதலைக்கான அத்திவாரமிடப்பட்டு வருகிறது இந்த அத்திவாரத்தின் அடிப்படையாக இருப்பது கல்வி.

புலிகள் இயக்கம் கல்விவளர்ச்சியில் கல்வி மேம்பாட்டை முற்றுமுழுதாக ஆதரித்தே நிற்கிறார்கள்; அதற்கான ஆக்கபூர்வமான செயல்திட்டங்களை செய்து வருகிறார்கள். அதற்கான அமைப்புகளை உருவாக்கியிருக்கிறார்கள். எமது இயக்கத்திற்கு அனுசரணையாக நின்று செயல்படும் இந்த அமைப்புகளில் எமது கல்வி மான்கள், எமது ஆசிரியர்கள் மற்றும் புத்திஜீவிகள் பங்குபற்றி ஆக்கபூர்வமான ஆலோசனைகளை

(6ஆம் பக்கம் பார்க்க)

## 6ஆம் ஆண்டு

# நினைவஞ்சலி



**கப்டன் அருண்**

ஏரம்பு – பாலச்சந்திரன் (சந்துரு)
புங்குடுதீவு - 1

தாயின் மடியில்: **18 - 10 - 1960**
தாயக விடிவில்: **09 - 04 - 1988**

வீறுகொண்ட வேங்கையே! புயலென
வீசிநின்ற 'அருண்' எனும் வீரனே!
நீறுகொண்டு வெம்பகைவரின் பாசறை
நெருப்பிலாடச் செய்த மறவனே!
ஆறுஆண்டுகள் போனதா? ஐயனே!
ஆடிநின்றநின் அழகும், இளமையும்
நூறு ஆண்டுகள் போயினும் எங்களின்
நினைவைவிட்டு நீங்குமோ? இல்லையே!

உன் நினைவுடன் வாழும்
அப்பா, அம்மா, அத்தான்மார்,
அக்காமார், அண்ணன், அண்ணி,
மருமக்கள், பெறாமக்கள்,
உறவினர், நண்பர்கள்.

இவருடன் வீரச்சாவைத் தழுவிய கப்டன் பிரசன்னாவையும் நெஞ்சில் நினைவுகொள்ளுகின்றோம்.

---

கூடுதல்

லன் ஏற்றிவைத்தார். ஈகச் சுடரை யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் குணரட்ணம் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து இரு நிமிட மௌனஞ்சலியுடன் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை தலைவர் வண. பிரான்சிஸ் ஜோசேவ் அடிகளார் தலைமையில் பரிசளிப்பு விழா ஆரம்பமானபோது யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் தமிழ் தாய் வாழ்த்தும் இடம்பெற்றது. வரவேற்புரையை பேரவையின் உப தலைவர் திரு. பஞ்சலிங்கம் நிகழ்த்தினார்.

இப் பரிசளிப்பு விழா தொடர்பாக தமிழீழ தேசியத் தலைவர் வே. திரு.பிரபாகரன் விடுத்தசெய்தி அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் அவர்களால் சபையில் வாசிக்கப்பட்டது.

சிறப்புரையை தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் நிகழ்த்தினார். மேலும் யாழ். வலயம் 1 கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி, வலயம்-2 பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. ஆர். எஸ். நடராஜா, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் திருமதி சி. இராமநாதன், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் மற்றும் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதியும் உரை நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து க. பொ. த. தே. 1993 பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் இடம்பெற்றது.

தேசிய மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற முதல் பத்து மாணவர்களுக்கு கல்வி மேம்பாட்டு பேரவையினரின் சான்றிதழ்களையும், பதக்கங்களையும் யாழ். வலயம் 1 கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பியும் கோட்ட மட்டத்தில் முதல் இரு இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களையும் பதக்கங்களையும் வலயம் 2 பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு இ சிவானந்தனும் வழங்கினர்.

தேசிய கோட்ட மட்டங்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற அனைத்து மாணவர்களுக்குமான தேசிய தலைவரின் விசேட பணப் பரிசிலையும் சான்றிதழ்களையும் தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு கரிகாலன் வழங்கினார். தொடர்ந்து தமிழ் மொழியில் அதி உயர் புள்ளிகளைப் பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்குமான விசேட பரிசில்களை யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் கோ. குணரட்ணம் வழங்கினார்.

இறுதியாக பரிசில் பெற்ற மாணவர்கள் சார்பில் மேற்படி பரீட்சையில் அதிகூடிய புள்ளியைப் பெற்ற செல்வி சிவசுப்பிரமணியம் (யாழ்- வேம்படி மகளிர் கல்லூரி) உரை நிகழ்த்தினார். பரிசில் பெற்ற மாணவர்களின் பெற்றோர் சார்பில் திரு சிவமகாலிங்கமும், பாடசாலை அதிபர்கள் சார்பில் புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபரும் உரையாற்றினர். இறுதியாக பேரவை செயலாளர் திரு. சண்முகநாதபிள்ளை நன்றியுரை வழங்கினார்.

## முப்படைக்கும்

இராணுவத்தில் சேரும் பயிற்சிபெறும் சிப்பாய்க்கு 5250 ரூபா மாதச் சம்பளம் வழங்கப்படுகிறது. பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு ஆரம்பச் சம்பளமாக மூவாயிரம் ரூபாவே வழங்கப்படுகிறது. இப் பாகுபாட்டை நீக்கி பொலிசாருக்கும் முப்படையினருக்கும் ஒத்ததாக சம்பளத்தை வழங்க வேண்டுமென பொலிஸ் சேமநலச் சங்கம் ஜனாதிபதியையும் பொலிஸ் மா அதிபரையும் கோரியுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தில் தற்போது சகல தரங்களையும் சேர்ந்த 60 ஆயிரம் பேர் பணியாற்றுகின்றனர்.

---

## எல்லா இடங்களிலும் விற்பனையில்

என் இனியவளுக்கு..



---

# உறுதிமொழிகள் நிறைவேறும்வரை ஐ. தே. கவிற்கு ஆதரவில்லை தொண்டா

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவினால் தமக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்தும் வரை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு எந்தவொரு ஒத்துழைப்பையும் தான் வழங்கப்போவதில்லை என அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

அரசாங்கத்துடன் எதிர்காலத் தொடர்பு குறித்து நேற்று முன்தினம் ஆராயும் பொருட்டு கட்சித் தலைமை இம் முடிவை எடுத்ததாக தொண்டமானின் ஆதரவாளர் கூறுகின்றனர்.

தோட்ட தொழிலாளர்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்குதல், அவர்களுக்கு காணிகள் மற்றும் வீடுகள் பகிர்ந்தளிப்பது, சம்பளப் பிரச்சினை தீர்ப்பது உட்பட பல கோரிக்கைகளை நிவர்த்தி செய்வதாக மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாசா உறுதி அளித்ததாகவும் எனவே இவ் உறுதி மொழியினை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையில் ஈடுபடும் வரை தாம் அரசாங்கத்துடன் எந்த ஒத்துழைப்பையும் வழங்கப்போவதில்லை எனவும் அக் கட்சியில் முடிவெடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

### சமாதான

வழங்கவேண்டுமென எமது இயக்கத்தின்சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர் அவர்கள் கூடிய நேரத்தை செலவிடுவது மக்களிடமிருந்து வரும் கடிதங்கள், அறிக்கைகளை பார்ப்பதற்குத்தான். ஏகப்பட்ட கடிதங்கள் தினமும் அவர் பார்த்தாக வேண்டும்.

### முழுமக்களுமே ஆலோசகர்கள்

எமது இயக்கத்தில் ஒரு ஆலோசகர் என்றில்லை. முழு மக்களுமே ஆலோசனை சொல்வார்கள். அந்த ஆலோசனைகளையெல்லாம் நாங்கள் உன்னிப்பாக கவனிக்கிறோம்.

எமது இயக்கம் தவறு செய்தால்கூட துணிந்து மக்கள் தலைமைப்பீடத்திற்கு எழுதவேண்டும். தலைமைப் பீடம் உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மக்களின் கருத்தறிந்துதான் சில காரியங்களைச் செய்ய வேண்டும்.

உலகானுபவம்பெற்ற புத்திஜீவிகளைக் கொண்ட இயக்கம் அல்ல இது. இளம் போராளிகள்தான் எல்லாம் செய்கிறார்கள். தவறுகள் வரும். மக்களாகிய நீங்கள் தான் இவற்றைக் கேட்கவேண்டும். தலைமைப் பீடத்திற்கு எழுத வேண்டும் என்றார். (தி).(ச)

### காவலரண்

அனுராதபுர ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

மேற்படி சம்பவம் 2ஆம் திகதி நண்பகல் நடைபெற்றதாக மேலும் தெரியவருகின்றது.

### இரு காவற்

தயானந்தன் (வீரபத்திரர் கோயில் ஒழுங்கை கல்வியங்காடு யாழ்ப்பாணம்) ஆகிய இரு காவல்துறையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்

### போட்டி

உடுப்பிட்டி கம்பர்மலை சங்கர் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு பாரதி சனசமூக நிலைய முன்றலில்நடைபெறவுள்ளது.

---

## மரண அறிவித்தல்



**கந்தையா மார்க்கண்டு**

வண்ணார்பண்ணை வடமேற்கு பத்திரகாளி கோவிலடியைச் சேர்ந்த கந்தையா மார்க்கண்டு 06-04-94 புதன்கிழமை காலமாகிவிட்டார். இவர் சின்னம்மாவின் அன்புக்கணவரும், அருமைத்துரை (ஸ்ரீலக்சுமி ஸ்ரோர்ஸ் கொழும்பு 2); குகதாசன் (பிரான்ஸ்), சண்முகதாஸ் (லக்சுமி ஸ்ரோர்ஸ் கேணியடி) புஸ்பரஞ்சினி (பிரான்ஸ்), தவரஞ்சினி, தவமணி, முருகதாஸ் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சிவகங்கை, செல்வறாகினி, செல்வதேவி, சிவானந்தமூர்த்தி, வீரகத்திப்பிள்ளை (கதி) ஆகியோரின் மாமனாரும், சுபாகரன், தாரணி, சிவந்தினி யோகராஜ், அஸ்வந், அஸ்வினி, நிஸாந்தன், நிவேஜன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 09-04-94 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற்று கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

96, பத்திரகாளி கோவிலடி,
வண் - வடமேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்
மா. சண்முகதாஸ்
(மகன்)

(கி-9067)

அக்காமார், அண்ணன், அண்ணி,
மருமக்கள், பெறாமக்கள்,
உறவினர், நண்பர்கள்.

இவருடன் வீரச்சாவைத் தழுவிய கப்டன்
பிரசன்னாவையும் நெஞ்சில் நினைவுகொள்ளுகின்றோம்.

(இ)

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபீண்டிகரண அழைப்பு



தோற்றம்:
15 - 03 - 1963

மறைவு:
10 - 03 - 1994

## அமரர் வைரமுத்து குமாரவேலு அவர்கள்

(இளைப்பாறிய மதுவரி உத்தியோகத்தர்)

### திதி வெண்பா

சிறந்த ஸ்ரீமுக வருடம் சேர்மாதம் பங்குனியில்
பிறந்த அமாவாசை சதயத் திதிதான் - நிறைந்த புகழ்
குமாரவேலுப் பேரால் குலவும் அப்பிலிங்கனவன்
பராபரனை சேர்ந்திட்ட நாள்.

10 - 03 - 94ந் திகதி இறை அடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் திரு. வைரமுத்து குமாரவேலு அவர்களின் ஈமக்கிரிகையில் சகல முனைப்புகளிலும் எமக்கு உதவிய நண்பர்கள், உறவினர்கள், அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (9 - 4 - 1994ந் திகதி இன்று எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அந்தியேட்டி சபீண்டிகரண நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நாவர் கோயில்,
தெற்கு.
(7982)

தகவல்:
மனைவி, மக்கள், சகோதரி,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 61-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


என் இனியவளுக்கு...



தளபதி கிட்டு அவர்கள்
தன் துணைவியாருக்கு
எழுதிய கடிதங்களின்
தொகுப்பு

உலக நாடுகளில் இருந்தபடி
போராட்ட வாழ்வின்
இன்ப துன்பங்கள் பற்றி,
அறத்தின் அடிப்படையிலான
தனிமனித வாழ்வு முறை பற்றி,
அரசியல் விழிப்புணர்வு பற்றி,
தளபதி கிட்டு தன் துணைவியாருக்கு
கடிதங்களாக எழுதிய எண்ணங்கள்

எல்லா இடங்களிலும்
விற்பனையில் உள்ளது.
எல்லோரும் வாங்கிப் படியுங்கள்

விலை ரூபா 50/-

(கி-9054)



யாழ் ஸ்ரீதர் திரையில்

ஒளி வீச்சு பெப்ரவரி - 94
மாத ஒளிவீச்சு

ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களில்
மட்டும் பிற்பகல் 2.30 மணிக்கு காண்பிக்கப்படும்.

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு காலை 10.30
மாலை 4.00, 6.00 மணி

***YOUNG DRAGONS***
***THE KUNG FU KIDS***

(கலர்)

(கி-9051)


கோயில் ஒழுங்கை கல்வியங்காடு யாழ்ப்பாணம்) ஆகிய இரு காவல்துறையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்

96, பத்திரகாளி கோவிலடி,
வண் - வடமேற்கு.
யாழ்ப்பாணம்.
(கி-9067)

தகவல்
மா. சண்முகதாஸ்
(மகன்)


# NEPTUNES

COLLEGE

NELLIADY KARAVEDDI

**A/L 96** — கலை வர்த்தக வகுப்புக்கள்

**O/L** — துரித மீட்டல் வகுப்புக்கள்

ஆரம்பம்

A/L 96: 11-04-94 மாலை 4.00 மணி

- அளவையியல் திரு. நவம்
- பொருளியல்:- திரு சிறீரங்கநாதன்
- கணக்கியல்:- திரு. நந்தகுமார்
- தமிழ்:- திரு. நவம், திரு. ரூபன்
- இந்து சமயம் ) இந்துநாகரிகம் ) செல்வி குமுதினி
- அரசியல் ) புவியியல் ) திரு. மனோகரன்
- கிறிஸ்தவ ) நாகரிகம் ) திருமதி ஜெயந்தினி

O/L: 10-04-94 காலை 10.00 மணி

- கணிதம்:- திரு. யோகேந்திரம், திரு. கெனத்
- விஞ்ஞானம்:- திரு. ஜெயானந்தம்
- தமிழ் ) சமயம் ) திரு. சிவலிங்கராசா
- சமூகக்கல்வி:- திரு. மனோகரன்
- ஆங்கிலம்:- திரு. செல்வநாதன்
- வர்த்தகமும் ) கணக்கியலும் ) திரு. ராஜகுலசிங்கம்

★ அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன

★ மாதாந்த பரீட்சைகள் நடைபெறும்

(கி9065)

- நிர்வாகி